[25th January 1961

SRI S. M. ANNAMALAI : மேஜைமீது வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் எய்டெட் பள்ளிக்கூடங்களில் வேலை செய்து கொண்டிருக்கும் ஆசிரியர்களைப்பற்றித்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கேள்வியிலுள்ள பி-பிரிவுக்குப் பதில் சொல்லவில்லை. பி-பிரிவுக்குப் பதில் சொல்ல முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் சொன்ன பதிலைக் கவனித்திருந்தால் விடையைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். பிரைவேட் பள்ளிகளிலிருந்துதான் அவர்கள் வேலையிலிருந்து விலக்கப்பட்டார்கள். மற்ற பள்ளிகளிலிருந்து விலக்கப்படவில்லை.

* 185 Q.—SRI K. R. NALLASIVAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பப் பள்ளிகளில் தற்போது ஆங்கிலம் ஐந்தாம் வகுப்புகளுக்கு வைக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) வரும் வருடம் நான்காவது வகுப்பிலேயே ஆங்கிலத்தை வைக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) Yes, Sir.

(இ) No final decision has been taken in the matter yet.

SRI K. R. NALLASIVAM : வெளியிலே 4-வது வகுப்பிலிருந்து ஆரம்பிப்பதைப் பற்றி அமைச்சர் பேசிவருகிறார்கள். முன்பு நமது போதனாமொழி ஆங்கிலமாக இருந்தது. இப்பொழுது அப்படியில்லாத நிலைமையை உண்டுபண்ணுகிறோம். அப்படியிருக்கும்பொழுது 5-வது வகுப்பிலிருந்து 6 வருடங்கள் கற்றுக் கொண்டால் போதாதா ? ஏன் நான்காவது வகுப்பிலிருந்து ஆரம்பிக்கவேண்டும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆங்கிலம் போதனாமொழியாக இல்லாத காரணத்தினால்தான், அதை நன்றாகக் கற்றுக் கொள்ளவேண்டிய அவசியம் இருக்கிறது.

SRI K. VINAYAKAM : As regards the introduction of the teaching of English from IV standard, may I know whether there is any conflict between the Minister in charge of Education and the Director of Public Instruction? For, I read in the papers that the Director of Public Instruction had announced that English would be introduced in the IV standard from the next academic year, but the Minister had categorically contradicted it the very next day. So, may I know whether the consolidated opinion of the Minister and the head of the Department will be formulated on the subject and announced?

THE HON. SRI C. SUBRAMANIAM : There could be many points of view as far as this matter is concerned. I have already stated that the matter of introduction of the teaching of English from the IV standard is under consideration and no final decision has yet been taken on the same.